DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 128/2022 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 3 |
| Name | குமார் என்ற செல்வக்குமார் |
| Father / Husband Name | செருவலிங்கம் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 24th April 2023.

---

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).

முதல் விசாரணை:-

1) நான் ஈசனூரில் குடியிருந்து வருகின்றேன். நான் கூலி வேலை செய்து வருகின்றேன். கடந்த 03.11.2021ம் தேதி ஒக்கூர் அண்ணா நகர் பேருந்து நிலையம் அருகே நானும், கார்த்திக் என்பவரும் மாலை 06.00 மணியளவில் நின்று கொண்டிருந்த போது வினோதினியும், கோகுல்ராஜும், லிங்கேஸ்வரனும் இருசக்கர வாகனத்தில் ஒக்கூரில் இருந்து சிவகங்கை நோக்கி வந்தார்கள். அவர்களுக்கு பின்னால் TN 63 N 1265 அரசு பேருந்து அதிவேகமாக வந்து சத்தம் கேட்டது வினோதினி மற்றும் அவரது குழந்தைகளுடன் வந்த இருசக்கர வாகனத்தில் பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்தியது.

2) விபத்தில் வினோதினி மீது பேருந்தின் முன்பகுதி ஏறி

வினோதினிக்கு மார்பு, தலை ஏறியதில் மூளை வெளியே வந்துவிட்டது. லிங்கேஸ்வரனுக்கு தலையிலும், கையிலும், காலிலும் அடிபட்டு சம்பவ இடத்திலேயே வினோதினியும், லிங்கேஸ்வரனும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். கோகுல்ராஜ்க்கு வலது புற இடுப்பு கால்முழுவதும் அடிபட்டு பலத்த காயம் ஏற்பட்டு இது நாள் வரை மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து வருகிறார்.

3) அரசு பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநரை என்னை அடையாளம் காட்ட முடியும் அவர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. விபத்து ஏற்பட்ட பின் பேருந்தில் இருந்த பெண்கள் செல்போன் நோண்டிக்கொண்டு பேருந்தை ஓட்டியதால் ஓட்டுநரை தாக்க முற்பட்ட போது நான் அவரை பார்த்தேன். விபத்தில் காயமுற்ற கோகுல்ராஜை முதலாவதாகவும், அதன் பிறகு விபத்தில் இறந்த மற்ற இருவரையும் 108 ஆம்புலன்ஸில் ஏற்றி சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள்.

4) இது சம்பந்தமாக அ.சா. 1 போலிசில் புகார் கொடுத்த விவரம் தெரியும். விபத்தில் காயம்பட்ட கோகுல்ராஜை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இறந்த வினோதினி மற்றும் லிங்கேஸ்வரனின் பிரேதத்தையும் பிரேத விசாரணை முடித்து 04.11.2021ம் தேதியன்று காலையில் நல்லடக்கம் செய்வதற்காக ஒப்படைத்தனர். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யவில்லை.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 24.04.2023**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**